திரு. கே. போஜன் : தலைவர் அவர்களே, சிறு தொழில் கார்ப்பரேஷன், ஏனைய மாவட்டங்களில் தொழிற்சாலைகளை அமைத்து அங்குள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தருகிறது. அதுபோல, நீலகிரி மாவட்டத்திலும், அங்குள்ள இயற்கை அமைப்புக்கிணங்க, ஒரு சிறு கைத்தொழிற்சாலையை ஏற்படுத்தினால், அங்குள்ள வேலையில்லாத் திண்டாட்டம் தீரும் ; ஆகவே, அங்கு சிறுதொழில் கார்ப்பரேஷன் மூலமாக ஒரு சிறு தொழிற்சாலையை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நீலகிரி மாவட்டத்தின் முன்னேற்றத்தில் கனம் உறுப்பினர் மிகுந்த அக்கறை காட்டுகிறார்கள். அரசாங்கம் அந்த மாவட்டத்தின் நலனில் எந்த அக்கறை கொள்ளவேண்டுமோ அதையெல்லாம் எடுத்துக்கொண்டு, செய்து வரும். தொழில் கார்ப்பரேஷன் மூலமாக அவர்கள் தொழில் ஆரம்பிப்பதாக இருந்தாலும் சரி, சிறு தொழில் நடத்துவதற்கு அங்குள்ள மக்கள் முன்வந்தாலும் சரி, அரசாங்கம் பரிசீலிக்கத் தயாராய் இருக்கிறது. ஏதோ குறிப்பிட்ட சில தொழில்களை அங்கே நடத்துவதற்கு வாய்ப்பு இருப்பதாகக் கனம் உறுப்பினர் கருதினால், அதைப் பரிசீலித்துச் சொன்னால், அதைச் செய்வதற்கு அரசு முன்வரும். கனம் உறுப்பினர் அத்தகைய யோசனையைத் தெரிவித்தால், அதையும் இந்தக் கார்பரேஷனுக்கு அனுப்பிப் பரிசீலிக்கச் செய்கிறேன்.

திரு. ஜெ. பெள்ளி கௌடர் : நீலகிரி மாவட்டத்தில் கூட்டுறவு முறையில் தொழில் ஆரம்பிக்க முன்வந்தால் அரசு ஆதரவு தருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கூட்டுறவுத் துறையில், வலிவற்ற சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் முன்னேற வேண்டுமென்பதற்காகப் பல திட்டங்கள் இருக்கின்றன. அதற்கும் கனம் உறுப்பினர் அவர்களும் அங்குள்ள மக்களும் முன்வந்தால், எந்த எந்தத் தொழில்கள் ஆரம்பிக்கப்படலாம் என்பதைப் பரிசீலித்துச் சொன்னால் அதற்குப் பண உதவியோ, வேறு எந்த உதவியோ, கச்சாப் பொருளோ (ரா மெட்டீரியல்ஸ்) தேவைப்பட்டால், அவற்றைத் தர அரசாங்கம் தயாராக இருக்கிறது.

திரு. சி. நஞ்சன் : நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த கூடலூர் பகுதியில் பெரும்பாலும் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள்தான் இருக்கிறார்கள். ஆனால், தேயிலைத் தோட்டத்தில் குறிப்பிட்ட நபர்களுக்குத்தான் வேலை கிடைக்கிறது. குடும்பத்தில் நான்கைந்து பேர்களுக்கு வேலையில்லாமல், அதிக வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரிக்கின்ற காரணத்தையொட்டி, கூடலூர் பகுதியில் ஏதாவதொரு தொழிலை ஆரம்பிக்க இந்த அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கூடலூர் பகுதியைப்பற்றி என்னிடம் தகவல் இல்லை.

மதுராந்தகம் வட்டத்திலுள்ள ஒங்கூர் அணைக்கட்டு.

*220 வினா. **திரு. கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் வட்டத்தில் ஒங்கூர் அணைக்கட்டுக் கட்ட ஒதுக்கப்பட்ட ரூபாய் எவ்வளவு ?

(இ) அதில் இதுவரை (1968) எவ்வளவு செலவழிக்கப்பட்டிருக்கிறது ?

(உ) அணைக்கட்டு வேலையும் அதன் மூலமாக ஏரிகளுக்கு செல்லும் Supply Channel வேலையும் முடிந்து விட்டனவா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஒங்கூர் ஆற்றின் குறுக்கே அணைக்கட்டு ஒன்றை ரூபாய் 1,80,300 செலவில் கட்டும் பணிக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டது.

(இ) இத்திட்டத்திற்கு ஏற்பட்ட செலவு ரூ. 2,50,463 ஆகும்.

(உ) இப்பணி முடிவடைந்துவிட்டது.

1969 மார்ச் 7]

THIRU K. VINAYAKAM : Sir, how many acres of land will be cultivated from the water stored by this dam?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : I do not have particulars about the extent of the acres to be cultivated.

கற்பகா நதித் திட்டம்.

*221 வினா—**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடை யளிப்பாரா—

நெல்லை மாவட்டத்தில் "கற்பகா நதித் திட்டம்" எப்போது துவக்கப் படும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : திருநெல்வேலி மாவட்டத் தில் கற்பகா நதி என்ற பெயருள்ள ஆறு எதுவுமில்லை. மாண்புமிகு உறுப்பினர் கறுப்பாநதி திட்டத்தையே குறிப்பிடுகிறார் என்று கொள்ளப் படுகிறது.

கறுப்பா நதியின் குறுக்கே நீர்த்தேக்கம் ஒன்று கட்டும் செயற் குறிப்பு அரசாங்கத்தின் ஆய்வில் இருந்து வருகிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, கறுப்பா நதித் திட்டத்தின் மொத்த மதிப்பு என்ன ? இது எப்பொழுது கட்டி முடிக்கப்படும் ? இந்தத் திட்டத்தினால் எத்தனை எக்கரா பயன் படும் ? அது எந்த எந்த இடங்களுக்குப் பயன்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இத்திட்டத்தின் மதிப் பீட்டுச் செலவு ரூ. 140 லட்சம். தற்போதுள்ள பகுதியில் 796 எக்கருக்குப் பாசன வசதி நிலைப்படும். பாசன வசதி ஏற்கனவே அளிக்கப்படாத பகுதியில், சேர்க்கப்படக்கூடிய ஆயக்கட்டு 1 647 எக்கர். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ள எண்ணியுள்ள திட்டங் களில் இதுவும் ஒன்றாகும். இத்திட்டம்பற்றிய செயற்குறிப்புகள் மத்திய நீர் மின்சாரக் கழகத்திற்கும் திட்டக் குழுவிற்கும் ஒப்புதல் அளிக்க அனுப்பப்பட்டுள்ளது.

ஹாஜி. ம. மு. பீர் முஹம்மது : பேரவைத் தலைவர் அவர்களே, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் திருநெல்வேலி மாவட்டத்தில் வேறு எந்த அணைக்கட்டுகள் எடுத்துக்கொள்ளப்படுவதாக அரசு நிச்சயித் திருக்கிறது என்பதைத் தெரிவிக்கலாமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அது ஒரு மிக விரிந்த கேள்வி. தனியாகக் கேள்வி போட்டால் பதிலளிக்கலாம்.

துடியலூர்-சர்க்கார் சாமக்குளம் சாலை.

*222 வினா. **திரு. பி. வேலுசாமி :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிங்காநல்லூர் தொகுதி துடியலூரிலிருந்து சர்க்கார் சாமக் குளம் வருகிற வழியில் இதுவரை, வையம்பாளையம் கோட்டை ஆகிய இந்த மூன்று ஊர்களுக்குப் போகும் வழியில் உள்ள பள்ளங்களில் குறுக்கே பாலங்கள் கட்டும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் என்றால் எப்போது வேலை மேற்கொள்ளப்படும் ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இதுகுறித்துச் செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசாங்கத்தின் ஆலோசனையில் இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.